நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

மின்பாதை

***20828—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு காவேரி குடிநீர் வழங்குவதற்குத் தடையில்லாத தனி மின்பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு காவேரி குடிநீர் வழங்குவதற்கு தனி மின்பாதையின் மூலமாகத்தான் தடையில்லா மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் தந்த காவியத் தாயே! கடைக்கோடியில் இருக்கும் மணப்பாறை தொகுதி மக்களையும் காவேரி நீரைப் பருகச் செய்த காவல் தெய்வமே! நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி எனது கேள்வியைக் கேட்கின்றேன்.*

2013 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1995 ஆம் ஆண்டு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனி மின்பாதை அமைத்து மணப்பாறை மக்களின் குடிநீர் குறை நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த தி.மு.க. அரசு 1996–ல் தனி மின்பாதையை பொது மின்பாதையாக மாற்றி குளித்தலை நகரில் சுமார் 30 மின்மாற்றிகளுக்கு மின் இணைப்பு கொடுத்துவிட்டது. தற்போது மின்தடை ஏற்படும்போதெல்லாம் குடிநீர் சரிவர கிடைக்காத காரணத்தால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, முன்பு இருந்ததைப்போல தனி மின்பாதை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மணப்பாறை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*